செ.வெ.எண்: 6 நாள்: 02.08.2016

## புதுக்கோட்டை மாவட்டத்தில் சுமார் ரூ.28.92 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் வளர்ச்சிப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சிப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (02.08.2016) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பல்வேறு வளர்ச்சிப்பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்து கூறியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஊரகவளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், துவார் ஊராட்சி, கல்லுப்பட்டியில் மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் ரூ.24.38 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட நாற்றங்கால் பணியையும், திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள மக்கும் குப்பை, மக்காத குப்பை சேகரிக்கும் குழிப்பணியையும், துவாரில் ரூ.3.34 இலட்சம் மதிப்பீட்டில் மரக்கன்றுகள் நடுவதற்காக சாலையின் இருபுறமும் சுத்தம் செய்து ஆழப்படுத்தும் பணியையும், குளக்காப்பட்டியில் இந்திரா நினைவு குடியிருப்பு கட்டும் திட்டத்தின் கீழ் ரூ.1.20 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் வீட்டின் கட்டுமான பணியையும் என மொத்தம் ரூ.28.92 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித்திட்ட பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.

இந்த ஆய்வின் போது நாற்றங்கால்களில் மரக்கன்றுகளை உரிய முறையில் நடவு செய்து பராமரித்து வளர்ப்பதுடன் இந்த மரக்கன்றுகளை ஊராட்சிகளில் சிறந்த முறையில் நட்டு வளர்க்கவும், கிராமங்களில் தினந்தோறும் சேகரிக்கும் குப்பைகளை திடக்கழிவு குழிகளில் மக்கும் குப்பை, மக்காத குப்பைகளை தனித்தனியாக பிரித்து சேமிக்கவும், நடைபெறும் பணிகளை தரமான கட்டுமானப்பொருட்களை கொண்டு விரைவாக கட்டிமுடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரவும் சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

இந்த ஆய்வின் போது ஒன்றியக்குழுத்தலைவர் திரு.சின்னப்பா, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.வீரப்பன், திரு.கருப்பையா, உதவி பொறியாளர் திரு.முகம்மதுஅப்பாஷ், ஒன்றியப்பணி மேற்பார்வையாளர் திரு.சபியுல்லா, ஊராட்சி மன்றத்தலைவர் திருமதி.மகாலெட்சுமிகோவிந்தராஜ், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**